# திருக்குறள் காட்டும் பயிர்த்தொழில்

அ. விமலா
துசேஆகல்லூரி, போர்ட்பிளேர்
அந்தமான் நிகோபர் தீவுகள்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5050

## முன்னுரை

தமிழின் பெருமையை உலகறியச் செய்த பெருமை பெற்ற நூல்களுள் ஒன்று திருக்குறள். எந்த நாட்டவர்க்கும் எம்மதததத்தவர்க்கும் எம்மொழியினர்க்கும் எப்பாிவினர்க்கும் ஏற்றதொரு நூல் திருக்குறள். அனைத்து செய்திகளையும் ஒருசேர இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறிய பெருமை வள்ளுவரையே சாரும். திருக்குறளில் கூறப்பட்டுள்ள கருத்துகள் மனித இனம் அனைத்திற்கும் பொதுவாகச் சொல்லப்பட்டவை. அதனால்தான் அனைவரின் வாழ்வுடன் ஒட்டி அனைவர்க்கும் இன்பம் பயக்கும் பொதுநூலாக அழியாப் புகழுடன் “உலப் பொது மறையாகத்” திகழ்கிறது. இன்றைய உலகம் அறிவியல் உலகம் ஆகும். அனைத்துத் துறைகளிலும் அறிவியல் கண்டுபிடிப்புகளும் அறிவியல் கருவிகளும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. அன்றிலிருந்து இன்று வரை மனிதனின் அடிப்படை தேவையான உணவு வேளாண்மைத் தொழிலைச் சார்ந்தே இருக்கிறது. உழவுத்தொழிலின் மேன்மையை உணர்ந்தே வள்ளுவரும் உழவு என்னும் அதிகாரத்தைப் படைத்துள்ளார். உழவுத்தொழிலின் மேன்மைகளை பல குறள்களிலும் எடுத்துக் காட்டியும் உள்ளார். அவற்றை இக்கட்டுரை எடுத்துரைக்கும் வகையில் அமைகின்றது.

## ஐந்திணைப் பாகுபாடு

தமிழ்ச் சமுதாயம் ஐந்நிலப் பாகுபாடுகளைக் கொண்டு விளங்கியது. அவை,

குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த இடமும்
முல்லை - காடும் காடு சார்ந்த இடமும்
மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும்
நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும்
பாலை - மணலும் மணற் சார்ந்த இடமும்

என்று ஐந்நிலப் பாகுபாடு இருந்தது. ஐந்நிலத்திற்கு என்று தனித்தனியே தொழில்களும் வரையறுக்கட்டுள்ளன. அவற்றில் மருத நிலத்தைச் சார்ந்த தொழில் உழவுத் தொழில்.

உழவுத் தொழில் நெற்பயிர் விளைவித்தலைச் சுட்டிக்காட்டும் வகையில் பல சங்க இலக்கியப் பாடல்கள் காணப்படுகின்றன. மருத நிலம் உழவுத்தொழிலில் உள்ள நடுதல் களை அரிதல் போன்ற செய்திகளை வெளிப்படுத்துகிறது. சங்க மருவிய கால இலக்கியமான திருக்குறள் மனித வாழ்வை விளக்கும் வாழ்வியற்பொருளுடன் இணைத்து பயிர்த் தொழிலையையும் சுட்டுகிறது.

## வேளாண்மை

பல துறைகளிலும் முற்போக்குச் சிந்தனைகளைக் கொண்டு வாழ்ந்தவர்கள் தமிழ்க்குடி மக்கள். பண்டைக்காலம் தொட்டே தமிழர்கள் உழவுத்தொழில் செய்து வந்துள்ளனர். வேளாண்மைத் தொழிலே பயிர்த் தொழில் எனப்படுகிறது.

**"பெரு நெல் பல்கூட்டு எருமை உழவு"[1]**
**வித்திய வுழவர் நெல்லொடு பெயரும்"[2]**

என்று உழவு என்ற சொல்லும் உழவர் என்ற சொல்லும் சங்கப் பாடல்களில் பயின்று வந்துளள்தைக் காணமுடிகிறது. உழவு என்பது "நெல் விளைதல்" எனக் குறிப்பிடுகிறது நெல் விளையும் வயல் நெல் விதைத்தல் உழுதல் நெல் அரிதல் போன்ற உழவுத் தொழில் நுட்பச் செய்திகள் பலவற்றையும் அறிந்து கொள்ள முடிகிறது. திருவள்ளுவர் பயிர்த்தொழிலை வேளாண்மை என்ற சொல்லால் குறிப்பிடவில்லை.

**தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"(212)**

முயன்று செய்து ஈட்டிய பொருள் எல்லாம் பிறர்க்கு உதவி செய்தலே என்று வேளாண்மை என்று சொல்லைப் பயன்படுத்திக் கூறுகிறார் "வள்ளுவர்." உலகவர் உயிர்வாழ மேகம் கைம்மாறு கருதாமல் நீர் பொழிந்து உதவுகின்றது தகுதியுடைய சான்றோரும் தம் முயற்சியால் ஈட்டிய பொருளனைத்தையும் பிறர்க்குத் தந்துதவுதன் பொருட்டே செலவிடுவர்"[3] என்று வள்ளுவர் தரும் வேளாண்மை என்ற சொல்லுக்கு விளக்கம் தருவர்.

பயிாத்தொழிலை "உழவு" "உழவுத்தொழில்" என்றே குறிப்பிடுகிறார்.

**சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை (1031)**

ஏருடையார் வழி நிறபது உலகம். அதனால் தலையாய தொழில் உழவே என்று சொல்கிறார்.

**"உழுவார் உலகத்தார்க்கு ஆணி" (1032)**
**"உழுதுண்டே வாழ்வாரே வாழ்வார்" (1033)**

என்று உழவர்களையும் உழுதொழிலையும் போற்றுகிறார் வள்ளுவர்.

நாடு என்னும் அதிகாரத்தில் வள்ளுவர்,

**"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வுஇலாச்**
**செல்வரும் சேர்வது நாடு" (731)**

குன்றாத விளையுளைச் செய்பவர்களும், அறவோரும், கேடு இல்லாத செல்வமுடை யோரும் சேர்வது நாடு என்று கூறுகிறார். இங்கு விளையுள் என்ற சொல்லைப் பயன்படுத்தியும் உழவுத் தொழில் செய்பவர்களையே முதலாவதாகவும் முன்னிலைப்படுத்தி பயிாத்தொழிலுக்குப் பெருமை சேர்க்கிறார். மேலும் நோயின்மை, செல்வம், விளைதல், இன்பம், காவல் என்ற ஐந்துமே நாட்டிற்கு அணி என்று குறிப்பிடுகிறார். இதில் "விளைதல்" என்பது உழவர் செய்யும் உழவுத் தொழிலின் பயிர் விளைச்சலைக் குறிக்கிறது.

## பாசனமுறை

பயிர்த் தொழிலுக்கு மண் நீர் ஆகிய இரண்டும் மிக இன்றியமையாதனவாகும். பழங்காலத்தில் தமிழகத்தில் பயிர்த்தொழில் உயிர்த் தொழிலாக விளங்கியது. பயிாத்தொழில் சிறக்க நீர் மிக இன்றியமையாதது.

**"நிலம் நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்**
**தட்டோரம்ம இவண் தட்டோரே**
**தள்ளாதோர் இவண் தள்ளாதாரே"[3]**

உணவு உற்பத்திக்காக ஏரிகள் போன்ற நீர்நிலைகளை அமைப்பது தலையாயக்

கடமை என்று குடபுலவியனார் என்னும் புலவர் குறிப்பிடுகிறார். அதனால் பயிர்த் தொழில் பெரும்பாலும் பாசனமுறையில் நடைபெற்றது பாசனமுறை, கிணற்றுப்பாசனம், குளத்துப்பாசனம், ஏரிப்பாசனம் எனப் பகுக்கப்பட்டது. திருவள்ளுவர் காலத்தில்

**“ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்” *(215)***

என்றும்,

**“தொட்டனைத் தூறும் மணற்கேணி” *(396)***

என்றும் வள்ளுவர் கூறுவதால் ஊருணி, கிணறு போன்ற நீர்நிலைகள் இருந்தன என்பதை அறியமுடியகிறது.

**“இறைப்பவர்க்கு ஊற்று நீர்போல மிகும்” *(1161)***

என்றும் குறிப்பிட்டுள்ளார். வள்ளுவர். இறைப்பவர்க்கு ஊற்று நீர் மிகுந்து சுரந்து கொண்டே இருக்கும். அந்நீர் ஊற்று நீர் எனப்படும் இந்நீர் அருந்தப் பயன்பட்டது. இன்றைய காலகட்டம் போல் வசதி நிறைந்ததாக இல்லாவிட்டாலும் வள்ளுவர் காலத்தில் பயிர்த்தொழிலுக்கு மழைநீரே மிகுதியாக பயன்பட்டுள்ளது. மழை நீரை ஆதாரமாக் கொண்டு பயிர்த்தொழில் செய்த காலத்தில் வள்ளுவர் வாழ்ந்தாலும் தற்போதைய காலத்திற்கு ஏற்றார் போன்ற வேளாண்மைக் கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

**“நிலத்தொடு நீர் இயைந்து” *(1323)***

நிலத்தொடு நீர் கலந்தாற் போல என்றும் கூறி நிலத்துடன் நீரினை இணைத்துக் காட்டியுள்ளார்.

**“இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்**
**வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு”*(737)***

கீழ் நீர் (நிலத்தடி நீர்), மேல் நீர் (மழை நீர்) எனப்பட்ட நீரும்,தக்கவாறு அமைந்த மலையும், அதிலிருந்து ஆறாகப் பெருகி வரும் வெள்ளமுமே நாட்டிற்கு உறுப்பு என்கிறார் வள்ளுவர்.

**“நீர் இன்றி அமையாது உலகம்” *(20)***

என்பது வள்ளுவர் வாக்கு.

**விண்இன்று பொய்ப்பின் டிவிரிநீர் வியனுலகத்து**
**உள்நின்று உடற்றும் பசி” *(13)***

மழை நீரை அமிழ்தம் என்று கூறுகிறார் வள்ளுவர். மழை வேண்டும் காலத்து பெய்யாது பொய்த்துவிட்டால் பசி என்னும் நிலை பெற்று அவ்வுலக மக்களை வருத்தும் என்று கூறுவதால் உழவுத்தொழிலுக்குப் பெரும்பாலும் மழைநீரே அடிபப்டை ஆதாரமாக விளங்கியுள்ளது.

**“இயல்புளிக் கோல்ஓச்சும் மனன்வன் நாட்ட**
**பெயலுட் விளையுளுந் தொக்கு” *(545)***

பருவ மழையும், குன்றாத விளைச்சலும் ஆட்சி செய்யும் அரசனின் இரண்டு கண்களாகும் என்கிறார்.

### உழவுத்தொழில் முறைகள்

உழுதல், எருப்பெய்தல், களைகட்டல், நீர்கால் யாத்தல், காத்தல் என்று இவ்வைந்தும் உழவுத்தொழிலுக்கு வேண்டும் என்பார் வள்ளுவர். உழவியலின் முதல் அங்கம் ஏர் கொண்டு உழுது நிரத்தைப் பண்படுத்துதல் ஆகும்.

என்கிறார் வள்ளுவர். தொடி, கஃசா என்பது அக்காலத்தில் நிலவிய அளவைகள் ஆகும். உழுதல் எப்படி அமைதல் வேண்டும் என்றால் ஒரு பலம் புழுதி கால்பலமாக மாறும்படி உழுதல் வேண்டும். பின் அதனைக் காயவிடுதல் வேண்டும் இதையே

**“தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்**
**வேண்டாது சாலப் படும்” *(1037)***

என்கிறார் வள்ளுவர். இவ்வாறு இரண்டாவது பணி எரு விடுதல் உழுத நிலத்தில் இயற்கையாக வளம் இல்லையெனில் உழவினால் பயன் இல்லை. எனவே பயிர் நன்கு செழித்து

வளர "எரு" விடுதல் வேண்டும்.

**ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்**
**நீராக நீளம்இந் நோய்" (1147)**

காமமாகிய பயிர், ஊர் மக்களால் எழுந்த அலர் எருவாக அன்னை சொல்லும் வெஞ்சொல் நீராக இருந்ததால் வளரா நின்றது என்று இன்பத்துப் பாலில் கூறியுள்ளார். பயிர்த் தொழிலிற்கு நீரும், எருவும் முக்கியமானதாகும். இவ்விரண்டையும் எடுத்துக்கொண்டு பயிராக காமநோயைக் காட்சிப்படுத்தியுள்ளார் வள்ளுவர்.

**ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றதன் காப்பு (1038)**

என்று வள்ளுவர் எருவிடுதலுக்குப்பின் நீர்ப் பாய்ச்சி பயிர் காக்கும் முறயை எடுத்துக் காட்டுகிறார்.

**"உணர்வதுடையார் முன் சொலல்ல் வளர்வதன்**
**பாத்தியுள் நீர்சொரிந் தற்று" (718)**

பிறர் உணர்தலின்றிப் பொருள்களைத் தாமே உணரவல்ல அறிவினை உடையார் அவையில், கற்றவர் ஒன்றைச் சொல்லுதல் பயிர் நின்ற பாத்தியுள் நீரினைச் சொரிந்தது போன்றது என்கிறார்.

பயிரின் இடையே வளரும் தேவையற்றதைக் களைதலுக்குப் பெயர் களையெடுப்பு என்று பெயர். இக்களையெடுப்பை வள்ளுவர்

**"கொலையில் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்**
**களை கட்டதனொடு நேர்" (550)**

அரசன் கொடியவர்களைத் தண்டனை அளித்து தக்கோரைக் காத்தல் உழவன் களையைக் களைந்து பைங்கூழைக் காத்ததனோடு ஒக்கும் என்கிறார்.

**முடிவுரை**

உழவுத்தொழிலின் மேன்மையை உணர்ந்தே வள்ளுவரும் உழவு என்னும் அதிகாரத்தைப் படைத்துள்ளார். உழவுத்தொழிலின் மேன்மைகளை பல குறள்களிலும் எடுத்துக்காட்டியும் உள்ளார். உழவு என்பது bநெல் விளைதலைக்b குறிப்பிடுகிறது. நெல் விளையும் வயல் நெல் விதைத்தல் உழுதல் நெல் அரிதல் போன்ற உழவுத் தொழில் நுட்பச் செய்திகள் பலவற்றையும் அறிந்து கொள்ள முடிகிறது. உழுதல், எருப்பெய்தல், களைகட்டல் நீர்கால் யாத்தல் காத்தல் என்று இவ்வைந்தும் உழவுத்தொழிலுக்கு வேண்டும் என்பார் வள்ளுவர்

மழை நீரை ஆதாரமாக் கொண்டு பயிர்த்தொழில் செய்த காலத்தில் வள்ளுவர் வாழ்ந்தாலும் தற்போதைய காலத்திற்கு ஏற்றார் போன்ற வேளாண்மைக் கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

**அடிக்குறிப்புகள்**

1. நற்றிணை -10
2. ஐங்குறுநூறு - 3
3. அ. சங்கரவள்ளி நாயகம், தமிழ் அமுது, குறளகம் வெளியீடு, ப.25.
4. புறம்:18

**துணைநூற்பட்டியல்**


1. திருக்குறள், கழக வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு சென்னை- 1990.
2. நற்றிணை, கழக வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு சென்னை-1992.
3. சங்கரவள்ளி நாயகம், தமிழ் அமுது, குறளகம் வெளியீடு, கோயிற்பட்டி, முதற்பதிப்பு 2002